# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051895

1. District மாவட்டம் : Chennai    PS: காவல்நிலையம் V&AC (Chennai City - II Unit)    Year: ஆண்டு 2021    FIR No.: மு.த.அ. எண் 04/2021    Date: நாள் 14.7.

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (Amended) 2018    Sections பிரிவுகள்: 7, 7A, PC Act
(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்: 102 Crpc.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 08.7.2021    Date to : நாள் வரை 08.7.2021
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 17.00 hrs    Time to : நேரம் வரை 22.00 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.7.2021    Time நேரம் : 11.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    மேற்கு 65 km.

Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம். நேரடி நெல் கொள்முதல் நிலையம். [illegible] கிராமம், திருவள்ளூர் மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. இரா. சுப்பரமணியன்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு -    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வு குழு அலுவலர்,    (g) Address : முகவரி மாவட்ட ஆய்வு குழு அலுவலகம் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம்
காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. சுந்தர்ராஜ் S/o செல்லய்யா, பருவகால எழுத்தர்,
2) திரு. நரேஷ் S/o ரவி, பருவகால காவலர், அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நேரடி நெல் கொள்முதல் நிலையம், [illegible] கிராமம், திருவள்ளூர் மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

—— தனி தாள் இணைக்கப்பட்டுள்ளது ——

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...V. Selvi... Rank ...Inspector... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 14.7.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 14.00hrs.

Name: பெயர் ...V. Selvi...
Rank: நிலை ...Inspector of Police... No. எண் ........
V & AC, Chennai City-II
Alandur, Chennai-16.

Continuation to column 12 of FIR in Cr.No.04/2021/CC-II

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 14.07.2021ந் தேதி மதியம் 14.00 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்தபோது காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அவர்கள் மூலமாக 09.07.2021-ந் தேதியிட்ட காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வு குழு அலுவலர் கொடுத்த புகாரை பெற்று ச/பி 7, 7(A) PC Act 1988 as Amendment 2018 & 102 Crpcன் படி இன்று 14.07.2021 வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநர் திரு.இரா.சுப்பிரமணியன், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள், (இ) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப்பிரிவு -2 சென்னை-16. ந.க.எண்.231/2021/அ, நாள் 09.07.2021, அய்யா, பொருள்: இருதுறை கூட்டு திடீர் தணிக்கை - தமிழ்நாடு நுகர்பொருள், வாணிப கழகம், நேரடி நெல் கொள்முதல் நிலையம், கச்சூர் கிராமம், திருவள்ளூர் மாவட்டம் - திடீர் ஆய்வு சோதனையில் கணக்கில் வராத கைப்பற்றப்பட்ட தொகை ரூ.27,000/- (இருபத்தி ஏழாயிரம் ரூபாய் மட்டும்) மற்றும் செயல்முறையின் அறிக்கை மற்றும் செயல்முறையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக - மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி 09.07.2021-ந் தேதி அளித்த புகார் மனு சம்மந்தமாக, கடந்த 08.07.2021ந் தேதி திருவள்ளூர் மாவட்டம், கச்சூர் கிராமத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் அதன் எல்லைக்குட்பட்ட கிராமங்களான ஸ்ரீராம குப்பம், விலமாகண்டிகை, போந்த வாக்கம், சீத்தஞ்சேரி, அம்மம்பாக்கம், கூனிபாளையம், பெருஞ்சேரி, வெங்கடாபுரம், விலாத்துகோட்டை, அதுலவாக்கம் முதலிய கிராமங்களை அரசின் பருவ கால நெல் கொள்முதல் அடிப்படையில் ஏப்ரல் மாதம் முதல் தொடங்கி ஜுலை மாதம் வரை மேற்படி கிராமங்களில் விவசாயிகளிடமிருந்து அரசு நிர்ணயித்த விலையில் நெல் மூட்டை கொள்முதல் செய்ய ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்து தனிப்பட்ட முறையில் அரசு நிர்ணயித்த விலைக்கு மேலாக ஒவ்வொரு மூட்டைக்கும் 40 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை லஞ்சம் பெறுவதாக வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில், மேற்படி நேரடி கொள்முதல் நிலையத்தில் நான் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சென்னை நகரபிரிவு - 2, காவல் ஆய்வாளர் திருமதி.அருணாஸ்ரீ அவர்கள் மற்றும் குழும உதவியுடன் இணைந்து 08.07.2021 -ம் தேதி மேற்படி கொள்முதல் அலுவலகத்திற்கு சென்று மாலை சுமார் 17.00 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. தணிக்கையின்போது உடனிருந்த அலுவலர்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

இருதுறை கூட்டு தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | இரா.சுப்பிரமணியன், மாவட்ட ஆய்வு குழு அலுவலர், காஞ்சிபுரம். | மாவட்ட துறை ஆய்வு குழும அலுவலர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம். |

| | | |
|---|---|---|
| 2. | திரு.விஸ்வகுமார், காவல் ஆய்வாளர், சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. |
| 3. | திருமதி.அருணாஸ்ரீ, காவல் ஆய்வாளர், சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. |
| 4. | திரு.வெங்கடேசன், சிறப்பு உதவி ஆய்வாளர், சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை+/-16. |
| 5. | திரு.சரவணன், தலைமை காவலர் 17684, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. |
| 6. | திருமதி.பிரெசிலா பிரேமாவதி, தலைமை காவலர் 23676, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. |
| 7. | திருமதி.சரண்யா, தலைமை காவலர் 32465, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. |
| 8. | திருமதி.சத்யவேணிமுத்து, முதல் நிலை காவலர் 37505, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகரபிரிவு-2, ஆலந்தூர், சென்னை-16. |

மேற்படி நேரடி நெல் கொள்முதல் நிலையமானது, திருவள்ளூர் ஊத்துகோட்டை நெடுஞ்சாலையில் கச்சூர் கிராமத்தில், ஊத்துகோட்டை மெயின் ரோட்டில் மேற்கு பக்கம் அமைந்துள்ளது. இந்த கொள்முதல் நிலையத்தில் கொள்முதல் செய்யப்படும் மேடையின் மேற்கு புறமாக இரண்டு அறைகள் கொண்ட சிறிய அலுவலகம் உள்ளது. மேடையின் தெற்கு புறமாக நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ள செட் உள்ளது. கொள்முதல் செய்யப்படும் மேடை மீதும் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. திடீர் சோதனையின்போது அலுவலகத்தில் முதலில் உள்ள அறையில் திரு.கந்தர்ராஜ், பருவ கால எழுத்தர் மற்றும் அவருக்கு உதவி கொண்டிருந்த திரு.நரேஷ், பருவ கால காவலர் இருந்தனர். மேலும் அதே அறையில் அன்றைய தினம் நெல் விற்பனை செய்ய வந்த விவசாயிகள் நால்வர் இருந்தனர். அந்த அலுவலகத்தின் இரண்டாவது அறையிலும் நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சோதனையின்போது மேற்படி அலுவலகத்தில் கீழ்காணும் கணக்கில் வராத மொத்த பணம் ரூபாய்.27,000/- பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-

| வரிசை எண் | கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்ட கைப்பற்றப்பட்டது | எவ்வளவு கைப்பற்றப்பட்டது |
|---|---|---|
| 1. | அலவலகத்தில் இரண்டாம் அறையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகளுக்கு இடையில் இரு | 500x20 =10,000/-<br>500x30=15,000/- |



Inspector

| | | |
|---|---|---|
| | இடங்களில் இருந்து கருப்பு நிற நெகிழித்தாள் பையில் சுற்றி ஒளித்து வைக்கப்பட்டிருந்தது கண்டுபிடித்து எடுக்கப்பட்டது. | |
| 2. | திரு.சுந்தராஜ், பருவ கால எழுத்தர் அமர்ந்திருந்த இடத்தில் வைத்திருந்த அவரது தோள்பட்டை பையிலிருந்து எடுக்கப்பட்டது. | 500x4=2,000/- |
| மொத்தம் | | ரூபாய். 27,000/- |

மேலும் திரு.சுந்தர்ராஜ், பருவ கால எழுத்தர் அவரது இடது பக்க மேல் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூபாய்.350/- மற்றும் திரு.நரேஷ், பருவ கால காவலர் என்பவர் அவரது மணி பர்சில் வைத்திருந்த பணம் ரூபாய்.250/- அவர்களது சொந்தப்பணம் என தெரிவித்தனர். தொடர்ந்து செய்த சோதனையில், அலுவலகத்தில் இருந்த கொள்முதல் தொடர்பான ஆவணங்களை பார்வையிட்டதில் இன்றைய தினம் 08.07.2021-ம் தேதியில், நேரடி நெல் கொள்முதல் செய்த்தில் 6 விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட விவரங்கள்..

| வரிசை எண். | கொள்முதல் செய்யப்பட்ட நபர் | மூட்டைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | திரு.முருகேசன், கலவை கிராமம். | 140 மூட்டைகள் |
| 2. | திரு.பாபு,<br>கலவை கிராமம். | 228 மூட்டைகள் |
| 3. | திரு.சீனிவாசலு,<br>கச்சூர் கிராமம். | 185 மூட்டைகள் |
| 4. | திரு.வெங்கடாத்திரி,<br>அம்மாபாக்கம் கிராமம். | 104 மூட்டைகள் |
| 5. | திரு.ஆஞ்சநேயலு,<br>கச்சூர் கிராமம். | 80 மூட்டைகள் |
| 6. | திரு.புருசோத்தமன்,<br>ஸ்ரீ ராம குப்பம். | 95 மூட்டைகள் |
| மொத்தம் | | 832 நெல் மூட்டைகள் |

இந்த கூட்டு தணிக்கையின்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருவள்ளூர் மாவட்டம் என்று எழுதப்பட்டிருந்த அடையாள வில்லை பதிவேடு Token Register from date 26.04.2021 S.No.173 to 363, Daily abstract of in Transaction in DPC dt:15.05.2021 to 07.07.2021 Register, திரு.சுந்தர்ராஜ் மற்றும் திரு.நரேஷ் ஆகியோரின் ஜூலை மாதத்திற்கான வருகை பதிவேடு, Gunny Register dt:29.12.2020 to 07.07.2021 and Stock Cum Movement dt:29.12.2020 to 07.07.2021 ஆகிய பதிவேடுகளின் நகல்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருவள்ளூர் மண்டலம், அலுவலகத்தில் பணிபுரியும் திரு.சுந்தர்ராஜ், பருவ கால எழுத்தர், செ.மு.ஆ.எண்இ5/0499/2021, நாள்:31.03.2021 மற்றும் திரு.நரேஷ், பருவ கால காவலர் என்பவரின் பணி நியமன செ.மு.ஆ.எண்.இ5/699/2020, நாள்.21.01.2021 ஆணையின் நகல்கள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

Inspector-II
VSAC, 14/7/21

இந்த சோதனையின்போது பருவ கால பட்டியல் எழுத்தர் அறையில் இருந்த திரு.சுந்தர்ராஜ் பட்டியல் எழுத்தர் மற்றும் அவரது உதவியாளர் திரு.நரேஷ் பருவ கால காவலர் ஆகியோரிடம் தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் சோதனையின்போது இருந்த நேரடி நெல் கொள்முதல் தினக்கூலியாக பணியாற்றிய மேஸ்திரி திரு.ஆனந்தம், த/பெ. திரு.கிருஷ்ணன் மற்றும் விவசாயிகள் 1. ரமேஷ், த/பெ. கோபால், 2. புருசோத்தமன், த/பெ.ரங்கப்பநாயுடு, 3. திரு.பார்த்தீபன், த/பெ.நாகேஷ், 4. திரு.வெங்கடாதிரி, த/பெ.ரங்கையா ஆகியோரிடம் தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் சோதனையின்போது மண்டல அலுவலர் திரு.சாகுல் அமீது அவர்களிடமிருந்து நேரில் வாக்குமூலம் பெறப்பட்டது.

மேலும் விசாரணையில் பருவ கால எழுத்தர் திரு.சுந்நர்ராஜ் கூலி ஆட்களுக்காக கொடுப்பதற்காக ஒவ்வொரு மூட்டைக்கும் ரூபாய்.40 வீதம் கூடுதலாக தனது உயரதிகாரிகள் வற்புறுத்தலின் பேரில் கேட்டு பெற்றதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் சோதனையின்போது அலுவலகத்தில் இருந்த விவசாயிகளை விசாரித்து பெற்ற வாக்குமூலத்தில் பருவ கால எழுத்தர் கூடுதலாக லஞ்ச பணம் கேட்டு வற்புறுத்தியது பற்றியும் தெரிவித்துள்ளனர். மேலும் கொள்முதலின் போது கூலி ஆட்களின் மேஸ்திரி திரு.ஆனந்தம் அவர்களை விசாரித்தில் தினக்கூலியாக ஒவ்வொருவரும் மூட்டைக்கு ரூபாய்.23/- வீதம் வாங்குவதாகவும் தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வுகளின் தொடர்பாக திடீர் கூட்டு தணிக்கை மாலை 17.00 மணி முதல் இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டு தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூபாய்.27,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் சோதனையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்பும் இன்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது.

மேற்படி நடத்தப்பட்ட திடீர் கூட்டு தணிக்கை ஆய்வில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், நேரடி நெல் கொள்முதல் நிலையம், கச்சூர் கிராமம், திருவள்ளூர் மாவட்டத்தில் தற்காலிக பணி நியமனம் செய்யப்பட்டிருந்த திரு.சுந்தராஜ், த/பெ.செல்லய்யா, பருவ கால எழுத்தர், மற்றும் திரு.நரேஷ், த/பெ.ரவி, பருவ கால காவலர் ஆகியோர் மீது சட்டப்பிரிவுகள் 7, 7(A) PC Act 1988 as Amendment 2018 and 102 Crpc சட்டத்தின்படி குற்றம் நிகழ்த்தி உள்ளது தெரிய வருவதால் மேற்படி நபர்கள் மீது இன்று 14.07.2021 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை குற்ற எண். 04/2021, சட்டபிரிவு 7,7A PC Act, & 102 Crpc ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை, மாவட்ட குழும அலுவலரின் அசல் புகாருடன் சமர்ப்பித்த திடீர் கூட்டு தணிக்கை ஆய்வறிக்கை, கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.27,000/-, தனி நபர் வாக்குமூலங்கள் மற்றும் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட 5 ஆவணங்களையும் ஆகியவை இணைக்கப்பட்டு கனம் முதன்மை நீதிதுறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, திருவள்ளூர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

Inspr CC-II
V&AC 14/7/21
Chennai-16.